செய்தி வெளியீடு எண்:388 நாள்: 16.07.2009

# <u>பத்திரிக்கைச் செய்தி</u>

## <u>*சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை*</u>

தமிழக சட்டசபையில் கடந்த 07.07.2009 அன்று சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது, கலைப் பண்பாட்டுத் துறையின் சார்பாக வெளியிடப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து, ‘‘எண்ணங்களில் வண்ணங்கள்’’ என்ற தலைப்பின் கீழ் தமிழக அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் ஓவியக்கலை ஆசிரியர்களுக்கு இன்றைய நவீன ஓவியங்களைக் குறித்து ஒரு புத்துணர்வுப் பயிற்சி முகாம் சென்னை அரசு கவின் கலைக் கல்லூரியில் 20.07.2009 அன்று மாண்புமிகு தமிழக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு தங்கம் தென்னரசு அவர்கள் மாலை 4.00 மணிக்கு தொடங்கி வைத்து சிறப்புரையாற்ற உள்ளார். இந்த புத்துணர்வுப் பயிற்சி முகாம் 10 நாட்களுக்கு நடைபெறும். இந்த முகாமின் மூலம் தமிழக அரசின் உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஓவியக்கலை ஆசிரியர்கள் இன்றைய சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள நவீனஓவியங்களின் தாக்கங்களைப் பற்றியும், கணினி வழி வளர்ச்சிகள் பற்றியும் கற்று, கற்பிக்கும் திறனை வளர்த்துக்கொள்ளவும், சுயதிறனை மேம்படுத்திக்கொள்ளவும் இம்முகாமில் பெற்ற அனுபவங்களை பள்ளி மாணவர்களுக்கு போதிப்பதன் மூலம் மாணவர்களுடைய கலைத்திறனை மேம்படுத்தவும் ஒரு வாய்ப்பாக அமையும். இம்முகாமில் பல்வேறு புகழ்பெற்ற பயிற்சியாளர்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள உள்ளனர். இதனுடைய நிறைவு நிகழ்ச்சி 29.07.2009 அன்று நடைபெறும். அன்று ஓவியக் கலைஞர்களின் படைப்புகள் பார்வைக்கு வைக்கப்படும்.

**அரசுச் செயலர்,**
**சுற்றுலா (ம) பண்பாட்டுத்துறை.**

**************

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9